நகராட்சி நிர்வாக ஆ...
11 SEP 2008
சென்னை-600 005

சுருக்கம்

சிலை – திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தின் தென் பகுதியில் ஏற்கனவே உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களின் கல்சிலையினை அகற்றிவிட்டு வ.உ. சிதம்பரனார் அவர்களின் முழு உருவ வெண்கல சிலையினை திருவனந்தபுரம் மெயின் சாலையினை நோக்கி அமைத்தல் – அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை

அரசு ஆணை (நிலை) எண். 169 நாள் : 08.09.2008

படிக்கப்பட்டது :

1) அரசாணை (நிலை) எண்.221, நநிமகுவ (நநி5) துறை, நாள் 20.11.98
2) மாவட்ட ஆட்சித் தலைவர்(பொறுப்பு) , திருநெல்வேலி, கடிதம் எண்.சி2/29918/2008, நாள் 14.7.2008
3) ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி கடிதம் எண். 3750/2007/டிபி2, நாள் 8.8.08

---

ஆணை :

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலப்பகுதிக்குட்பட்ட வார்டு எண்.24–ல் பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தின் தெற்கு சுற்றுச் சுவர் அருகில் சுதந்திர போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் கல்சிலை உள்ளது. வ.உ.சி மைதானத்தின் தெற்குப் பகுதியிலுள்ள வ.உ.சி. கல்சிலையினை அகற்றிவிட்டு வ.உ.சி. மைதானத்தில் திருவனந்தபுரம் மெயின் சாலையினை நோக்கி வெண்கலச் சிலையை அமைக்க அனுமதி வழங்கலாம் எனவும், இதற்கு திருநெல்வேலி மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மானம் எண்.312, நாள் 27.9.2007–ல் அனுமதி அளித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2) இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு) திருநெல்வேலி அவர்கள், திருநெல்வேலி, மாநகர காவல் ஆணையர் பாளையங்கோட்டை வார்டுக்குட்பட்ட வ.உ.சி.மைதானத்தின் தென்பகுதியில் ஏற்கனவே உள்ள வ.உ.சிதம்பரனார் கல்சிலையினை அகற்றிவிட்டு புதிய வ.உ.சிதம்பரனார் முழு உருவ வெண்கல சிலை நிறுவுவதற்கு 6 பேர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும், மேற்படி முழு உருவ வெண்கல சிலையை சுற்றி கம்பி வேலை அமைக்கப்பட வேண்டும் எனவும் , சிலையின் மேல்பகுதியில் மின் விளக்கு பொருத்தப்பட வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளார் எனவும், மேலும் அவர் பாளையங்கோட்டை பகுதி 2 கிராமத்தில் அமைந்துள்ள வ.உ.சி. மைதானத்தில் அமைந்துள்ள வ.உ.சி. சிலையை அகற்றிவிட்டு புதியதாக வெண்கல சிலை அமைப்பது தொடர்பாக எவ்வித ஆட்சேபணையும் எழவில்லை என்றும், மேற்கண்ட இடம் மாநகராட்சிக்குட்பட்டது என்றும் தெரிவித்து, பிரஸ்தாப

இடத்தில் வ.உ.சி. வெண்கல சிலை அமைக்க அனுமதி வழங்கலாம் எனப் பரிந்துரை செய்துள்ளார்.

3) திருநெல்வேலி மாநகராட்சி மாமன்றத் தீர்மானத்தையும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு) அவர்களின் பரிந்துரையினையும், அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தின் தென் பகுதியில் ஏற்கனவே உள்ள கல்சிலையினை அகற்றி பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் திருவனந்தபுரம் சாலையினை நோக்கி சுதந்திர போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் முழு உருவ வெண்கல சிலையினை வ.உ.சிதம்பரனார் சிலை அமைப்புக் குழு அமைப்பதற்கும் மற்றும் பராமரித்து பாதுகாக்கவும் அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்

தலைவர், வ.உ.சிதம்பரனார் சிலை அமைப்புக் குழு,
53,தெற்கு கடை வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர்,சென்னை–9.
மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகல்
பொது(ச(ம)ஓ) துறை, சென்னை –9
நநிமதுவ (நநி5/மாந1/ அந2) துறை
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

சே. தேவகி அம்மாள்
பிரிவு அலுவலர்.